(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த 5 ஆண்டுகாலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ஏறக்குறைய 1,615 கால்நடை மருத்துவ நிலையங்கள் கட்டுவதற்கு ரூ.422 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 1,265 கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கரங்களினாலே அனைத்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது 350 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

40—

கூட்டுறவு நூற்பாலை

***64042—திரு. சு. ரவி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிடர் மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி, வெற்றி, வெற்றி! இனி அம்மா அவர்களுக்கு எல்லாமே வெற்றிதான் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

2016 ஜனவரி 23]

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா என்ற வினாவிற்கு, அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட அரசியலைத் தன்னைச் சுற்றியே சுழல வைக்கும் உலகத் தமிழினத்தின் ஒரே விலாசம்; கருத்தரிப்பவர் 10 குழந்தைகளுக்குத் தாயாக முடியும். ஆனால், கருணை தரிப்பவரே பத்து கோடி தமிழர்களுக்கும் தாயாக முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் புவிக்குப் புரியவைத்த புரட்சித் தாய் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். இமயத்தைப் பணிய வைக்கும் துணிவும், இல்லார்க்கு வாழ்வளிக்கும் கனிவும், தொண்டர்களை வாழவைக்கும் வீரமும், துரோகிகளை வீழ்த்துகின்ற வீரமும், நெருப்பாற்றில் நீந்துகின்ற தீரமும், நினைத்ததை முடிக்கின்ற நெஞ்சின் உரமும் ஒருசேரப் பெற்று, உலகமே கூர்ந்து கவனிக்கிற தலைவியாக உலகத் தமிழர்கள் மட்டுமல்ல; உலகத் தலைவர்களே உன்னிப்பாகப் பார்க்கிற உன்னதத் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) இல்லாமை, போதாமை நீக்கப்பட்டு, வலியோர், எளியோரை வாட்டிடும் கொடுமை ஒழிக்கப்பட்டு, எல்லோர்க்கும் ஏற்றம், இன்பம், உறுதி என்ற நிலைபாட்டுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வருவாயைப் பெருக்கி, பொருளாதாரத்தை வளப்படுத்திட பல்வேறு திட்டங்களை வழங்கி வருபவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.*

'என் சமூகம் தூங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்' என்று சொன்னார் அண்ணல் அம்பேத்கர். அதேபோன்று, இந்தச் சமூகம் கல்வியறிவு பெற வேண்டுமென தூங்காமல் விழித்து, உழைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே தலைவி, நம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணத்தைச் சுற்றியுள்ள குருராஜப்பேட்டை, வளர்புறம், நாகவேடு, சம்பத்ராயன்பேட்டை, நெமிலி, பணப்பாக்கம், மேல்களத்தூர், மின்னல் போன்ற பல்வேறு கிராமங்களிலே வாழும் பெரும்பாலான மக்களெல்லாம் கைத்தறி மற்றும் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு நெசவு நெய்வதற்கு நூல்கள் அதிகமாகத் தேவைப்படுவதால், வெளி மாவட்டங்களிலிருந்தும், வெகு தொலைவிலிருந்தும் நூலை இறக்குமதி செய்து, துணிகளை அதிகளவில் ஏற்றுமதி செய்கிறார்கள்.

அரக்கோணம் தொகுதி, ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கும் தொகுதியாகும். ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலான இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களெல்லாம் குறைந்த ஊதியத்திற்குத் தனியார் நிறுவனங்களை நாடி, தொலை தூரம் செல்கிறார்கள். எங்கள் தொகுதியிலே நெசவுத் தொழிலை அதிகமாகச் செய்வதால், ஆதி திராவிடருக்கென பிரத்தியேகமாக ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, கேள்வியைக் கொஞ்சம் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. சு. ரவி: *அவர்களுக்கு வேலைவாய்ப்பும், அதேநேரத்தில், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து தடையில்லாமல் தரமான நூலை குறைந்த செலவிலே வழங்கிட ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கென பிரத்தியேகமாக ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கென்றே பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி வருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் வகுப்பினருக்காகவே பிரத்தியேகமாக மாண்புமிகு இதய தெய்வம்*

புரட்சித் தலைவர் காலத்தில் 1985 ஆம் ஆண்டு, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகா, அச்சன்குளம் கிராமத்தில், 12,320 நூற்புக் கதிர்களுடன், 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலையினை மூடிய பெருமை கடந்த ஆட்சியாளர்களுக்கு உண்டு. அது கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூடப்பட்டது.

ஆதி திராவிட சமுதாய மக்கள் மற்றும் பின்தங்கியோர் நலனில் எப்போதும் அக்கறையும், கருணையும் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11-3-2012 ஆம் தேதியன்று நடத்திய ஆய்வின்போது, இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்தி, மீண்டும் திறந்து, இயக்குவதற்காக உத்தரவிட்டார்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: 29-11-2012-ல் சிறப்பு நிதியொதுக்கீடாக ரூபாய் 18 கோடியே 43 இலட்சம், 11-12-2014-ல் ரூபாய் 9 கோடியே 59 இலட்சம் என மொத்தம் ரூபாய் 28 கோடியே 2 இலட்சம் வழங்கப்பட்டு, இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலை நவீனப்படுத்தப்பட்டு, மீண்டும் திறக்கப்பட்டு, அந்தப் பகுதியிலே 200 ஆதி திராவிடர்கள் மீண்டும் வேலைவாய்ப்பினைப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, எதிர்வரும் காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்ற பின்னர், அதற்குரிய ஆயத்த நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.